# வீட்டு சபை ஏன் இதற்குத் தீர்வு இல்லை

## உறவுமுறையிலான சபையில் வாழ்தல், VIII

Translated from the original article, "Living in the relational church, VIII"

By *Wayne Jacobsen*

20 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஜெபித்தபிறகும்கூட, என்னால் இதற்குத் தீர்வு காணமுடியவில்லை. அப்போது என்னால் ஒரேவொரு முடிவுக்குத்தான் வர முடிந்தது: ஒன்று, தேவன் என்னை கம் டு கொள்ளவில்லை அல்லது நான் தவறான காரியத்தைக் கேட்டுக்கொண்டிருந்தேன். பதற்றம்தான் என் நிரந்தரக் கூட்டாளியாக இருந்தது. நேர்மையாகச் சொல்ல வேண்டுமானால், அதனுடன் சேர்ந்து வாழ்வது விளையாட்டான காரியம் அல்ல. நான் எதிர்பாராத நேரத்தில் அது என் அடிவயிற்றில் பயங் கரமாகத் தாக்கியது. அதின் பிதற்றல்களினிமித்தம், பல இரவுகளில் நான் கண்விழித்திருக்க வேண்டி யிருந்தது.

பதற்றத்தை உண்டாக்கிய சூழ்நிலைகள் ஏற்பட்டபோதெல்லாம், "தேவனே, நான் பதற்றம் இல்லாமல் இருக்கும்படிக்கு இந்தச் சூழ்நிலையை மாற்றும்," என்று நான் அவரிடம் மன்றாடினேன். இம்படிம்பட்ட என் ஜெபங்களுக்கு அவர் பதிலளிக்கவில்லை; அப்படிப் பதில் தந்தாலும் அபூர்வமாகத்தான் தந்தார். பிரச்சினை சூழ்நிலைகள் அல்ல, பதற்றம்தான் பிரச்சினை என்று நான் கடைசியாக முடிவுசெய்தேன். எனவே, என் ஜெபங்கள் மாறின. "தேவனே, என் சூழ்நிலைகளை மாற்றும்," என்று அவரிடம் மன்றாடு வதற்குப்பதிலாக, "என் பதற்றத்தை அகற்றும்," என்று ஜெபிக்க ஆரம்பித்தேன். இந்த ஜெபங்களும் வேலைசெய்யவில்லை என்பதை, இந்த சமயத்தில், 10-12 வருடங்களில் கண்டுபிடித்தேன். என் அக்கறைகளைக்குறித்து தேவன் அலட்சியமாக இருக்கிறாரோ என்று நினைத்து சொல்லமுடியாத அளவுக்கு நான் ஏமாற்றம் அடைந்தேன்.

எனக்கும் பதற்றத்தை ஏற்படுத்திய சூழ்நிலைகளோ அல்லது பதற்றமோகூட, தேவனைப் பொறுத்த வரை, என் பிரச்சினை இல்லை என்பது அப்போது எனக்குத் தெரியாது. தேவன் தம் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு என் சூழ்நிலைகளில் வேலைசெய்ய நான் அவரை நம்பவில்லை என்பதுதான் பிரச்சினை. என் வாழ்க்கை என் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற என் ஆசையும், அவருக்கும் இறுதியாக எனக்கும், என் தகுதியை நிரூபிக்க நான் நினைத்த வெற்றியை அடைய வேண்டும் என் ஆசையுமே உண்மையாக என்னை ஆட்கொண்டிருந்தன.

தேவன் ஏதோவொன்றை அம்பலப்படுத்தி, அவர் தாம் யார் என்பதையும், அவர் என்னில் என்ன செய்ய விரும்புகிறார் என்பதையும் இன்னும் தெளிவாக வெளிப்படுத்தி, அதன்மூலம் என்னைக் குணப்படுத்த விரும்பினார். பதற்றம் இப்படிப்பட்ட ஓர் ஆழமான தேவையின் ஓர் அறிகுறியாக மட்டுமே இருந்தது. உங்களில் பலர் அந்தப் பயணத்தின் வரலாற்றைச் செய்திமடலிலும், 'அவர் என்னை நேசிக்கிறார்' என்ற புத்தகத்திலும் வாசித்திருப்பீர்கள். அவர் எவ்வளவு பெரியவர் என்பதையும், என்னை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதையும் எனக்கு எவ்வளவு அதிகமாகக் காண்பித்தாரோ, அந்த அளவுக்கு மிகக் குறைவாகவே எனக்குள் பதற்றம் ஏற்பட்டது. என் சூழ்நிலைகள் மாறாதிருந்தபோதும், அவர்மேல் நான் கொண்ட நம்பிக்கை வளர்ந்துவிட்டது. தேவன் என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புவதைக்கூட நான் விட்டுவிட்டேன். மாறாக, அவர் தருகிற ஒவ்வொரு நாளிலும் இயல்பாக வாழ விரும்புகிறேன்.

தவறான காரியங்களையெல்லாம் தேவன் சரிசெய்ய வேண்டும் என்று என் மிகச் சிறந்த ஞானத்தில் நான் முயற்சிசெய்துகொண்டிருந்தேன். உண்மையான சுதந்திரம், என் சூழ்நிலைகளை என் எதிர் பார்ப்புகளுக்கு ஒத்துப்போகச் செய்வதிலோ அல்லது என் கவலையான எண்ணங்களை அகற்று வதிலோ இல்லை. என் வாழ்க்கைப் பாதையில் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்தாலும் சரி, என் இரு தயத்தை இளைப்பாறச்செய்கிற ஓர் உறவை அவர் என்னுடன் ஏற்படுத்த விரும்பினார். முப்பது ஆண்டு களாக, இம்படிம்பட்ட உம் மையான உறவுக்குப்பதிலாக மலிவான ஒரு பதிலீடை நான் தேடிக்கொண் டிருந்தேன்.

தேவனுடைய சபையின் ஒரு பகுதியாக இருப்பது எப்படி என்பதைக் கண்டுபிடிப்பதில் மக்கள் அதே காரியத்தைச் செய்வதை நான் பார்க்கிறேன். மதரீதியான அநேக அமைப்புமுறைகளின் பலவீனங்களையும், தோல்விகளையும் பார்த்ததால், வீட்டு சபைதான் உண்மையான சபை வாழ்க்கைக்கான தீர்வு என அவர்கள் நினைக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக, அங்கும் அவர்கள் ஏமாற்றம் அடைவது சாத்தியமே.

**முறைமை அல்ல காரியம்**

வீடுபோன்ற சிறிய குழுக்களில், கிறிஸ்துவின் சரீரம் தன் விசுவாசத்தையும், ஐக்கியத்தையும் வாழ்வதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதை நான் நேசிக்கிறேன் என்று *சரீரவாழ்க்கை* என்ற இதழை வாசிக்கிறவர்களுக்குத் தெரியும்; அங்கு மக்கள் தங்கள் விசுவாசப் பயணத்தில் மும்முரமாகப் பங்குபெறமுடியும். மக்கள் தேவனுடைய ஜீவனை சேர்ந்து பகிர்ந்துகொள்ள ஆதி சபையில் வீடுதான் மிகவும் இயற்கையான சூழலாக இருந்தது.

ஒரு வீட்டு சபையில் ஈடுபடாதவரை, சரீர வாழ்க்கையில் தாங்கள் அனுபவிக்க விரும்பின எல்லாவற்றுக்கும் அதுதான் தீர்வாக இருக்க முடியும் என்று மக்களை நம்ப வைப்பது எளிது. ஒரு வீட்டில் கூடிவருகிற கூட்டம், அது புகழ்ந்து பேசப்படக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது சீக்கிரத்தில் அப்பட்டமாகத் தெரிந்துவிடுகிறது. குழுவைத் தன் சொந்தத் தேவைகளுக்காக மட்டும் பயன்படுத்த விரும்புகிற மக்களை நாம் என்ன செய்ய முடியும்? அப்படிப்பட்ட வாழ்க்கையைச் சேர்ந்து பகிர்ந்துகொள்ள ஒரு விலைக்கிரயம் செலுத்தச் சித்தமாயிருக்கிற மக்களை நாம் எங்கு கண்டுபிடிக்க முடியும்? கூட்டம் சலிப்பாக இருக்கும்போதும், நாம் ஒருவரையொருவர் முறைத்துப்பார்த்துக் களைத்துப்போகும்போதும் நாம் என்ன செய்யப் போகிறோம்?

காரியங்களை ஒரு பெரிய கட்டிடத்தைவிட்டு ஒரு வீட்டுக்குள் கொண்டுபோவதால், அர்த்தமுள்ள மாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடாது. அங்கு எல்லாரும் இன்னும் அதிகமாகப் பங்குபெறுவதும், ஆழமாக உறவு கொள்வதும் சாத்தியமாகிறது. ஆனால், கூடிவர வேண்டும் என்பதற்காக எல்லாரும் ஒரு வீட்டில் சேர்ந்து உட்காருவதால் அது உருவாகிவிடாது. சபையாக வாழ்வது என்றால் என்னவென்பதின் பொருளை மக்கள் அறிந்துகொள்ளவிட்டால், தலைவர்களாக வேண்டும் என்ற தங்களுடைய தாகத்தினிமித்தம் குழுவைத் தங்கள் ஆதிக்கத்தில் எடுத்துக்கொள்ள அல்லது தங்கள் தேவைகளை, ஆசைகளை, குழுவின் மையமாக்க முயற்சிசெய்வதின்மூலம் அதை இடித்துத்தள்ள இயக்கவிதிகள் ஒரு மேடையை அமைத்துக்கொடுக்கும்.

இன்று நாம் சபையாகக் கூடி வரும் விதத்தில் தவறு இருக்கிறது. ஆனால், இது நாம் பயன்படுத்துகிற சம்பிரதாயங்களோடு அதிகமாகச் சம்பந்தப்படவில்லை. மாறாக, இது நாம் சென்றுகொண்டிருக்கிற பயணத்தோடு சம்பந்தப்பட்டது. அமைப்புரீதியான முறைமைகள் தொடமுடியாத தேவைகளை வீட்டு சபையால் நிறைவேற்ற முடியும் என்று நாம் எதிர்பார்த்தால், அங்கு ஏற்படுகிற அனுபவங்களால் நாம் ஒருவேளை ஏமாற்றம் அடையக்கூடும். தேவனுடைய குறிக்கோளை மையமாகக் கொள்வதற்குப் பதிலாக, நம் தேவைகளை மையமாகக்கொண்டு நாம் பயணத்தை ஆரம்பித்தால், நிச்சயமாக நாம் ஏமாற்றம் அடைவோம்.

**சுய-தேவைகளைப் பரஸ்பரமாக நிறைவேற்றுதல்**

என் பதற்றத்தை நான் விரும்புகிறபடி தேவன் மாற்ற வேண்டும் என்று நான் முயற்சிசெய்வதுபோல், நம் தேவைகளின் அடிப்படையில் தேவனோடு உறவுகொள்வதற்கு நாம் வகுத்தமைக்கப்பட்டிருக்கிறோம். அந்த சுய-தேவைகளின் அடிப்படையில், சபையைப்பற்றி நாம் எப்படி புரிந்துவைத்திருக்கிறோமோ, அதை நாம் கட்ட ஆரம்பித்தால், தேவன் நமக்காகச் சிருஷ்டித்துள்ள உண்மையான சபையை அரவணைத்துக்கொள்வதற்குப்பதிலாக, மலிவான போலித்தனமான ஏதோவொன்றில் நாம் முடிவடைந்து ஏமாந்துபோவோம். மற்றவர்கள் நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது நமக்குப் பாதுகாப்பு வேண்டும் அல்லது நம் வரங்களை மற்றவர்களுக்கு நிரூபித்துக்காட்ட ஓர் இடம் வேண்டும் அல்லது நம்மை ஒரு குறிப்பிட்ட விதத்தில் நேசிக்க நமக்கு மக்கள் வேண்டும் அல்லது நான் கிறிஸ்துவில் எப்படி வாழ வேண்டும் என்று எனக்குச் சொல்லித்தர யாரோ ஒருவர் வேண்டும் என்ற எண்ணத்தில் நான்

சபையைப் பார்க்க ஆரம்பித்தால், நாம் ஏற்கெனவே தவறான பாதையில் போய்க்கொண்டிருக்கிறோம் என்று பொருள்.

பெரும்பாலான மக்கள் இதைப் பார்ப்பதில்லை; ஏனென்றால், பதற்றத்திலிருந்து விடுதலையாக வேண் டும் என்று நினைப்பதைப்போல, அவர்கள் விரும்புகிற காரியங்கள் பொல்லாதவைகள் அல்ல. இந்த முறையில்தான் நாம் காரியங்களைச் சாதித்துக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறோம். இதுதான் உண்மையான கண்ணியாக மாறிவிடுகிறது. என் நண்பர் ஒருவர் பல வருடங்களாக ஒரு ஸ்தாபனத்தில் பாஸ்டராக இருந்தார். அவர் ஒருநாள், "அமைப்புமுறையிலான மதம் என்பது சுய-தேவையைப் பரஸ் பரமாக நிறைவேற்றும் இடம்," என்று வரையறுத்தார். ஒருவனுக்கு, நடத்த வேண்டிய தேவை இருக் கிறது; இன்னொருவனுக்கு நடத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. மற்றவர்கள் தங்களை அங்கீ கரிக்கவேண்டும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள்; சிலர் அவர்களுடைய இரட்சகராகச் செயல்படுவதை விரும்புகிறார்கள். சிலர் முன்னுக்குச் சென்று, பாட வேண்டும் என்று விரும்புகிறார்கள்; வேறு சிலர் நடந்துகொண்டிருக்கும் ஆராதனையில் சும்மா உட்கார்ந்திருக்க விரும்புகிறார்கள். சிலருக்குக் குழந்தைகளுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற பேராவல்; வேறு சிலர், மற்றவர்கள் தங்கள் குழந்தைகளைச் சீடராக்கிக்கொள்ளட்டும் என்று நினைத்து தங்கள் குழந்தைகளை அவர்களிடம் விட்டு விட விரும்புகிறார்கள்.

அவரவருடைய தேவைகள் நல்ல முறையில் நிறைவேறும்வரைதான் சபைகள் இருக்க முடியும் என்பது தான் அவர் சொன்னதின் சாரம். அவரவருடைய தேவைகள் சந்திக்கப்படும்போது, சபை பிரபலமாக நன்றாகச் செல்கிறது. அவரவருடைய தேவைகள் சந்திக்கப்படாதபோது, அவர்கள் வதந்திகளிலும், அதிகாரத்தைப் பறித்துக்கொள்ளும் சண்டையிலும் சிக்கிக்கொள்கிறார்கள்; அல்லது தங்கள் தேவை களை நிறைவேற்றுகிற புதிய சபையைக் கண்டுபிடிக்க அவர்கள் வெளியேறிவிடுகிறார்கள் அல்லது வேறொரு குழுவோடு சேர்ந்து தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிற ஒரு புதிய சபையை ஆரம்பிக்கிறார்கள். அங்கு, அதே காரியங்கள் மீண்டும் நடக்க ஆரம்பித்துவிடுகின்றன. ஆனால், சபை வாழ்க்கை நம் சுய-தேவைகளின் அடிப்படையில் அல்ல, மாறாக தேவனுடைய மக்களைம்பற்றி அவருடைய குறிக் கோளின் அடிப்படையில்தான் கட்டப்படுகிறது என்று பெரும்பாலானவர்கள் ஒருபோதும் உணர்வ தில்லை.

இடத்தை, ஒரு கட்டிடத்திலிருந்து ஒரு வீட்டுக்கு மாற்றுவதால் பிரச்சினை தீர்ந்துவிடாது. நம் தேவை களை மற்றவர்கள் நிறைவேற்றுவதில்தான் சபை வாழ்க்கை இருக்கிறது என்ற நோக்கத்தில் நாம் சபை வாழ்க்கையைத் தேடினால், சில வேளைகளில் நம் தேவைகள் சந்திக்கப்படக்கூடும்; ஆனால், பெரும் பாலான வேளைகளில் அவைகள் சந்திக்கப்படாமல் போகக்கூடும். அப்போது நாம் அதிருப்தி அடை வோம், ஏமாற்றம் அடைவோம்.

**முற்றிலும் சார்ந்திருத்தல்**

நாம் இயேசுவை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும் என்று நாம் உணரும்போது, உண்மையான ஐக்கி யத்தை அனுபவிக்கும் மகிழ்ச்சி ஆரம்பிக்கிறது. பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற கட்டாயத்தினால் நாம் ஐக்கியத்தைப் பகிர்ந்துகொள்வதில்லை. நம் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக நாம் ஐக்கியம்கொள்வதில்லை. நாம் கிறிஸ்துவைச் சார்ந்திருப்பதின் விளைவாக, மற்றவர்களை நாம் அன்புகூர ஆரம்பித்தால், அங்கு மட்டும்தான் உண்மையான ஐக்கியத்தை அறியமுடியும். அவருடைய ஜீவனின் மகிழ்ச்சியையும், சுதந்தரத்தையும் நாம் அறிந்திருந்தால், அதை நம்மால் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளாமல் இருக்க முடியாது.

வேதவாக்கியங்கள் இதைம்பற்றி தெளிவாகம் பேசுகின்றன. மெய்யான ஜீவன் இயேசுவில் மட்டும காணம்படுகிறது. வேறு எதிலும் ஜீவன் இல்லை...வீடுகளில் அல்லது கட்டிடங்களில் கிறிஸ்தவர்கள் மிகச் சரியாக ஏற்பாடு செய்கிற கூட்டங்களாக இருந்தாலும் சரி. இயேசுவே சபையின் தலை என்று பவுல் கூறும்போது, அவர் இதையே குறிப்பிடுகிறார். அவரே "எல்லாவற்றிலும் முதன்மையானவராக இருக்க வேண்டும்," என்பதே தேவனுடைய குறிக்கோள். சரீர வாழ்க்கையின் மையம் நம் தேவைகள் அல்ல. நம்மிடையே வாழ்கிய அவருடைய பிரசன்னமே மையம்.

தேவனுடைய ஜீவனால் நிரம்ப நாம் சபைக்குச் செல்ல வேண்டும் என்ற தவறான கருத்தை நாம் வருடக்கணக்காகப் போதித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், அது உண்மை இல்லை! குமாரன்மூலம் பிதாவுடன் கொள்ளும் மறுசாயலாக்கும் உறவின்மூலம் மட்டும்தான் நாம் தேவனுடைய ஜீவனால் நிரப்பப்பட முடியும். நாம் சபையினால் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காகச் சிருஷ்டிக்கப்படவில்லை; மாறாக, நாம் அவரால் நிரப்பப்பட்டு வாழ வேண்டும்; அதன்பின் அவருடைய ஜீவனை தேவனுடைய மக்களோடு சேர்ந்து பகிர்ந்துகொள்ள வேண்டும்.

இன்று சபை அழைக்கம்படுகிற--வீட்டு சபைகள் உட்பட-- பல இடங்களில் இதுதான் பிரச்சினை. இயேசு கிறிஸ்வைச் சார்ந்து வாழ்வது எப்படி என்று மக்களுக்குப் போதிப்பதற்குப்பதிலாக, மக்களின் வாழ்க்கையில் இயேசுவின் இடத்தை எடுத்துக்கொள்ள முயல்கிற தன் தவறான முயற்சியால், அது அவரைச் சார்ந்துவாழ்வதை அகற்றிவிடுகிறது. அவரில் வாழ்வது எப்படி என்று மக்களுக்குப் போதிப் பதற்குப் பதிலாக, நாம் இன்று சபை என்றழைக்கிற அமைப்புமுறைகளையும், கூடுகைகளையும் மக்களைச் சார்ந்து வாழச்செய்துவிடுகிறோம். நாம் சபை வாழ்க்கை வாழும் விதம், மக்கள் அவரில் ஆழமாகவும், நிறைவாகவும் வாழும் வழியை அடைத்துக்கொண்டிருக்கிற இன்னொரு காரியமாக மாறிவிடுகிறது.

ஆனால், இயேசுவோடு நெருக்கமான உறவுகொம் டு வாழக் கற்றுக்கொள்கிறவர்கள், அவருடன் அப் படி வாழ விருப்புகிறவர்களுடன் தங்கள் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்வதின் உண்மையான மகிழ்ச்சி யைக் கண்டடைவார்கள். ஒருவேளை ஒரு கணப்பொழுதுதான் அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கக் கூடும் அல்லது வருடக்கணக்காக அவர்கள் சேர்ந்து நடக்கக்கூடும். ஆனால், அவர்கள் ஒருவரை யொருவர் தந்திரமாகக் கையாளமாட்டார்கள் அல்லது ஒருவரையொருவர் கட்டுப்படுத்தமாட்டார்கள். ஏனென்றால், இயேசு மட்டுமே எல்லாரையும் கட்டுப்படுத்துகிறவர் என்று இந்த மக்கள் உணர் கிறார்கள்.

அப்படி வாழ்வது எப்படி என்று பெரும்பாலான விசுவாசிகளுக்குத் தெரியாது என்பது துரதிருஷ்டவச மாகும். மக்களை நம் நிகழ்ச்சிநிரல்களையும், ஆராதனைகளையும் சார்ந்து வாழச்செய்வதில் நாம் திருப்தி அடைந்துவிடுகிறோம். தங்களால் கொடுக்கமுடிந்ததைவிட அதிகமாகச் சாதிக்க முடியும் என்ற வாக்குத்தத்தத்தை இன்று அநேக சபைகள் ஏன் கொடுக்கின்றன என்பதை இது விளக்குகிறது. சபை வாழ்க்கையின் பல்வேறு வழிகளை நாம் எல்லாக் காலமும் பழுதுபார்த்துக்கொண்டும், ஒட்டுப்போட்டுக் கொண்டும் இருக்கலாம். ஆனால், நாம் இந்தக் காரியத்தை சரி செய்யவில்லையென்றால், நம் முயற்சி களெல்லாம் வீணாகிவிடும். உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், இந்த வகையில் வாழ்ந்துகொண் டிருக்கிற சில மக்களை--“ஒரு கூட்டம் சீடர்களைக்” கூட்டிச்சேர்க்கிறவர்கள் அல்ல-- கண்டுபிடித்து, அவர்களுடைய உதவியை நாடுங்கள்.

இயேசுவில் தங்கள் முழுக் கவனத்தையும் குவித்திருக்கிற ஒரு கூட்டம் மக்களிலிருந்தே சபை வாழ்க்கை வளர்கிறது. உங்கள் முழுக் கவனத்தையும் நீங்கள் சபையின்மேல் குவித்தால், நிச்சயமாக நீங்கள் எப்போதும் ஏமாற்றம் அடைவீர்கள். உங்கள் முழுக் கவனத்தையும் நீங்கள் இயேசுவின்மேல் குவித்தால், அவர் உங்களைச் சுற்றி சபையைக் கட்டுவதை நீங்கள் காண்பீர்கள்.

***எங்கும் ஓர் இயக்கம்***

இப்போது நான் எங்கு போனாலும் சரி, அங்கு மக்கள் ‘வீட்டு சபை இயக்கத்தைப்பற்றிக்’ கேட்கிறார்கள். உண்மையான சபை வாழ்க்கையின்மேல் அவர்களுக்கு இருக்கும் பசிக்கு அதுதான் தீர்வாக இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அமைப்புரீதியான சுற்றுச்சூழல்களைவிட உறவுமுறையிலான சுற்றுச் சூழல்களை நான் அதிகமாக விரும்புகிறேன். ஆனால், ‘இயக்கம்’ என்ற வார்த்தையைக் கேட்கும் போதெல்லாம், என் இருதயம் தொய்ந்துபோகிறது. தேவன் செய்துகொண்டிருக்கும் ஒரு காரியத்தை என்றைக்கு நாம் ஓர் இயக்கம் என்று அழைக்க ஆரம்பிக்கிறோமோ, அன்றைக்கு அது சாக ஆரம்பித்து விட்டது என்பது உறுதி. அநேக இயக்கங்கள் வந்து போனதை நான் பார்த்திருக்கிறேன்--பரவச இயக் கம், சீடனாக்கும் இயக்கம், விடுதலை இயக்கம், சுகமாக்கும் இயக்கம், பரிந்துபேசும் இயக்கம், ஆவிக் குரிய யுத்த இயக்கம், தீர்க்கதரிசன இயக்கம், ஆராதனை இயக்கம், அப்போஸ்தல இயக்கம், இன்னும் பல. முடிவில், அவையெல்லாம் வெறுமையில் முடிந்தன். அவைகளில் தேவன் இருக்கவில்லை என்ப

தல்ல காரணம். மாறாக, தங்கள் சொந்தத் தேவைகளையும், பேராசைகளையும் நிறைவேற்ற மக்கள் அவருடைய வேலையைத் தங்களுக்காகப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதுதான் காரணம்.

ஏதோவொன்றை இயக்கம் என்று அழைக்கும்போது, அது நம் முக்கியத்துவத்தை உயர்த்தி, காரியங் களை ஒரு குறிப்பிட்ட வகையில் செய்யக்கூடிய விதத்தை மிஞ்சுகிற தேவனுடைய பலமுகமுடைய வேலையிலிருந்து நம்மைப் பிரித்துவிடுகிறது. அநேக ஆண்டுகளுக்குமுன், தன்னை ஓர் இயக்கம் என் றழைத்த ஒரு ஸ்தாபனத்தில் நான் இருந்தேன். காரியங்களை நாங்கள் செய்ததுபோல் செய்யாத 'குறைவாகப் பிரகாசிப்பிக்கப்பட்ட' மற்ற விசுவாசிகளைவிட, தாங்கள் அதிக முக்கியத்துவம்வாய்ந்த ஏதோவொன்றின் பகுதி என்று மக்களை நினைக்கவைக்க நாங்கள் அந்தப் பதத்தைப் பயன் படுத்தினோம். இப்படிப்பட்ட வேறுபாடுகளில் தேவன் துக்கப்படுகிறார் என்று நான் நினைக்கிறேன்.

கிறிஸ்துவின் ஜீவனை நம் வீடுகளில் பகிர்ந்துகொள்ளக் கற்றுக்கொள்ளும்போது வருகிற மகிழ்ச்சியை 'வீட்டு சபை இயக்கம்' என்று நாம் முத்திரை குத்தும்போது, நாம் கிறிஸ்துவின்மேலுள்ள முழுக் கவனத் தையும் எடுத்துவிட்டு, அதை நம் முறைமைகளின் ஒம்பற்றதன்மையில் அல்லது தங்களைத் தாங்கள் வல்லுநர்களாக நியமித்துக்கொண்டவர்களின் குரலில் வைத்துவிடுகிறோம்.

சமீபத்தில் நான் நியூ யார்க்கிலுள்ள பஃபலோவில் ஒரு வீட்டில் இருந்தபோது, ஒரு நண்பர் அங்கு வந்து வீட்டு சபை இயக்கத்தைப்பற்றி ஒரு புதிய புத்தகத்தை எனக்குத் தந்தார். "...இந்தப் புரட்சியை முன்னின்று நடத்துகிற முற்போக்கான மனிதர்களிடமிருந்து," என்ற உபதலைப்பு என்னை ஏறக்குறைய நிலைகுலையச் செய்துவிட்டது. என் நண்பனாக இருக்கத் தகுதியுடையவர் என்று நான் நினைத்த அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர்களில் ஒருவரிடம், "இந்தப் புத்தகத்தின் தலைப்பு தேவதூஷணம் இல்லையென்றால், அது வேறு என்ன என்பதை எனக்கு விளக்கிச் சொல்லமுடியுமா?" என்று கேட்டேன்.

சபை உண்மையில் இயேசுவின் வேலையென்றால், அங்கு எல்லாவற்றிலும் அவருக்கே முதலிடம் இருக்கிறதென்றால், தேவன் செய்துகொண்டிருக்கிற ஒன்றை வேறு யாரோ ஒருவர் முன்னின்று நடத்து வதாக எப்படி கோர முடியும்? ஒன்று, அது தேவனுடைய வேலை, இல்லையென்றால் அது தேவனுடைய வேலை இல்லை. இவர்கள் தேவனுடைய சபைக்குத் தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற கெட்ட நோக் கம் கொண்ட மனிதர்கள் என்று நான் நினைக்கவில்லை. தயவுசெய்து இதைப் புரிந்துகொள்ளுங்கள். சபை ஒருவகையான முழுமையையும், சுதந்தரத்தையும், ஜீவனையும் அடைய வேண்டும் என்று, குறிப் பாக, இவர்கள் நேர்மையாகவே விரும்புகிறார்கள். ஆயினும், அவர்கள் இதைச் செய்கிற வழியைம் பார்க்கும்போது, அவர்கள் தேவனுடைய வழிகளைப்பற்றி ஏதோ கொஞ்சம் அறிந்திருக்கிறார்கள், ஆனால் அவருடைய குணத்தைப்பற்றி மிகக் குறைவாகவே அறிந்திருக்கிறார்கள் என்று காண்கிறோம்.

எனவே, இந்தப் புத்தகம் தேவனுடைய ஜீவனை சேர்ந்து பகிர்ந்துகொள்வதற்கான பல்வேறு வழிகளை விளக்கமாகக் கூறினாலும்கூட, சரியான இயக்கவிதி இருந்தால் அல்லது சரியான தலைவனைப் பின் பற்றினால் அந்த ஜீவனை உற்பத்திசெய்துவிடலாம் என்ற விஷத்தனமான கருத்து அதில் இழையோடு கிறது. இப்படிப்பட்ட போதனை உண்மையில் தான் ஆதரிப்பதாகக் கூறுகிற முன்னுரிமைகளை தகர்க் கிற ஓர் அமைப்புமுறையைத் திணிப்பதின்மூலம், அவைகளை இடைமறித்துவிடுகிறது.

நிச்சயமாக, என் நண்பர் நான் சொன்னதை ஏற்றுக்கொள்ளவில்லை. சொல்லப்போனால், அந்தப் புத்த கம் விறுவிறுப்பாக விற்பனையாகிக் கொண்டிருப்பதாக அவர் கூறினார். அதில் எனக்கு எந்தச் சந்தேக மும் இல்லை. மக்கள் மாதிரிகளை விரும்புகிறார்கள். அப்போது அதே மாதிரிகளை தங்கள் சமுதாயத் திலும் எளிதில் செயல்படுத்திவிடலாம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இது, நாம் இயக்கங்களை உருவாக்குவதற்கான ஒரு காரணம்.

**உயர்தர மாதிரிகள்**

அநேக மக்கள் சபை வாழ்க்கைக்கான மாதிரியை என்னிடம் கேட்கிறார்கள். எதிர்காலத்தில் நான் எழு தும் ஏதாவது ஒரு புத்தகம் அப்படிப்பட்ட மாதிரியைப்பற்றி விளக்கிச் சொல்லும் என்று அவர்கள் நம்பு கிறார்கள். நான் அவர்களை ஏமாற்றவிரும்பவில்லை; ஆனால், உயிர்த்துடிப்புள்ள உண்மையான ஐக்கியத்தை உருவாக்கக்கூடிய ஒரு மாதிரியை அவர்களால் செயல்படுத்த முடியும் என்று நான்

நம்பவில்லை. அது இயக்கவிதிகளில் அல்ல, மாறாக தேவன் தம்மைப்போல் மறுசாயலாக்கிக்கொண் டிருக்கும் மக்களின் இருதயங்களில் இரு உருவாக்கப்படுகிறது.

ம்ங்கள் வேதாகமத்திலுள்ள மிகச் சிறந்த வழிமுறைகளை எடுத்துக்கொள்ளலாம். இயேசுவைச் சார்ந்து வாழ்வது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வதற்குப் பதிலாக, நீங்கள் அந்த வழிமுறைகளைச் செயல் படுத்த ஆரம்பித்தால், அவைகள் இயேசுவின் பிரசன்னத்திற்கு ஒரு பதிலீடாகத்தான் இருக்குமேதவிர, சக பயணிகள் தங்கள் வாழ்க்கையைச் சேர்ந்து பகிர்ந்துகொள்கிற இடமாக இருக்காது.

இயேசு நாம் கட்டுவதற்காக நமக்கு ஒரு மாதிரியை விட்டுச் செல்லவில்லை; மாறாக, நாம் பின்பற்று வதற்காக நமக்கு ஒரு வழிகாட்டியைத் தந்திருக்கிறார். நாம் ஒரு குறிப்பிட்ட முறையில் அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடிவருவதால் நாம் சபை வாழ்க்கையை அனுபவிக்கவில்லை; மாறாக, நாம் சேர்ந்து தேவனுக்குச் செவிகொடுப்பது எப்படி என்று கற்றுக்கொள்வதாலும், அவருடைய ஜீவனை பகிர்ந்துகொள்வது எப்படி என்று நமக்குக் கற்றுத்தர அவரை அனுமதிப்பதாலுமே நாம் சபை வாழ்க்கையை அனுபவிக்கிறோம். சபை வாழ்க்கையை அனுபவிப்பதற்காக நாம் எந்த முன்மாதிரியை அல்லது உருமாதிரியை எடுத்துக்கொண்டால், நாம் அவரைப் பின்பற்றுவதற்குப்பதிலாக மாதிரியைப் பின்பற்ற ஆரம்பித்துவிடுவோம்; உண்மையான சபை வாழ்க்கையை அனுபவிப்பதற்குப்பதிலாக போலியான ஏதோவொன்றைக் கட்ட ஆரம்பித்துவிடுவோம். தேவனோடு நாம் ஆழமான உறவைம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆனால், இதிலிருந்து பல காரியங்கள் நம் கவனத்தைத் திசைதிருப்புகின்றன. தேவனுக்காக ஏதோ மாபெரும் காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதற்காக நாம் அதிகமாகப் பிரயாசப்படுகிற நம் முயற்சிகள்தான் இதிலிருந்து நம் கவனத்தை அதிகமாகத் திசைதிருப்புகின்றன. நாம் அவருக்காக அல்ல, மாறாக அவருடன் சேர்ந்து வேலைசெய்ய வேண்டும் என்றுதான் அவர் நம்மிடம் கேட்கிறார்.

மாதிரிகளைக்குறித்தும், இயேசு சொல்வதைக் கேட்பதற்கு உங்களுக்கு உதவுவதற்குப்பதிலாக, நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்குச் சொல்ல விரும்புகிற தலைவர்களைக்குறித்தும் ஜாக்கிரதையாயிருங்கள். இன்று கிறிஸ்துவின் சரீரத்தில் உண்மையான தலைவர்கள் இருக்கிறார்களா? நிச்சயமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இயக்கங்களுக்கு தலைமைதாங்கவில்லை அல்லது மாதிரிகளைக் கண்டுபிடித்துக்கொண்டிருக்கவில்லை. உண்மையாகவே இயேசு யார் என்பதை அறிய வும், அவரைப் பின்பற்றுவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்ளவும் அவர்கள் மக்களுக்கு உதவு கிறார்கள். மனிதர்கள்—ஆண்களும், பெண்களும்—தங்கள் மிகச் சிறந்த நோக்கங்களோடும், மிகச் சிறந்த நடவடிக்கைகளோடும், மிகச் சிறந்த செயல்திட்டங்களோடும், தேவனுடைய வேலையைச் செய்துமுடிக்க முயற்சிசெய்யும்போது அதன் விளைவாக மதம் பிறக்கிறது. இதனால் எப்போதுமே நல்ல நோக்கமுடைய செயல்திட்டங்கள் பிறக்கின்றன; அவைகளால் கொஞ்சம் நன்மை ஏற்படலாம். ஆனால், தேவன் விரும்புகிற மாபெரும் கனிகளைக் கொடுக்கும் அளவுக்கு அவைகளால் உயர முடி யாது. அவரால் மட்டுமே அதை சாதிக்க முடியும்.

அமைப்புரீதியான மதத்தினால் மிக மோசமான அளவுக்கு நான் காயப்படுத்தப்பட்டிருப்பதால், நான் அதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறேன் என்று அநேகர் நினைக்கிறார்கள். அது முற்றிலும் உண்மை இல்லை. அமைப்புரீதியான மதத்தில் அப்பட்டமாக பிழை இருக்கும்போது அல்ல, மாறாக அது நன்றாக வேலைசெய்யும்போதுதான் அதிலிருந்து மிகப் பெரிய ஆபத்து வெளிவருகிறது; அது மக்களுக்கு ஒரு மேல்பூச்சான அனுபவத்தைக் கொடுக்கும்போது அல்லது அது மக்கள் தங்கள் குற்றத்தைப் போடு வதற்கான ஓர் இடமாக மாறி, மகிமையின் இராஜாவுடன் உண்மையான உறவைத் தவறவிடும்போது தான் ஆபத்து வருகிறது. ஒரே அறையில் உட்கார்ந்திருப்பதுதான் அல்லது வண்டிகளை நிறுத்தும் இடத்தில் ஒருவரையொருவர் சுருக்கமாக வாழ்த்துவதுதான் உண்மையான ஐக்கியம் என்று அது நம்ப வைத்தால், தேவன் நம் வாழ்க்கையில் செய்துகொண்டிருப்பதற்கு நாமெல்லாரும் இன்னும் சிறம்பாக மறுமொழி கொடுக்க நமக்கு உதவுகிற ஆதரவான உறவுகளினால் வருகிற மாபெரும் மகிழ்ச்சியை நாம் தவறவிட்டுவிடுவோம்.

**எந்தப் பதிலீடுகளையும் ஒப்புக்கொள்ளாதீர்கள்**

நம் நாட்களில் ஆவியானவர் செய்துகொண்டிருக்கும் ஒரு காரியத்தை நான் நேசிக்கிறேன். அவருடைய வேலை ஒரு நிறுவனத்தினாலோ அல்லது ஒரு புத்தகத்தினாலோ அல்லது கவர்ச்சியான பேச்சாளராலோ இயக்கப்படுவதில்லை. தேவனுடைய ஆவியானவர் தம் மக்களில் பசியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்; அந்தப் பசி மதங்களின் வரம்புகளை அல்லது காரியங்களை ஒரு குறிப்பிட்ட வகையில் செய்ய வேண்டும் என்ற சட்டத்தை உடைத்தெறிந்து, அவருடைய பிரசன்னத்தை இன்னும் ஆழமாகப் பருக வேண்டும் என்று நாடுகிறது, மற்ற சக பயணிகளுடன் வீரியமுள்ள வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்கிறது.

இப்படிப்பட்ட பசியுடைய சிலர் அமைப்புரீதியான சபைகளுக்குள் இருக்கிறார்கள். சிலர் அதற்கு வெளியேயும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்களை நீங்கள் இதுவரை கண்டுபிடிக்கவில்லையென்றால், சோர்ந்துபோக வேண்டாம். தேவன் தாம் ஏற்படுத்தப் போகிற எல்லா உறவுகளையும் ஏற்படுத்தி முடித்துவிடவில்லை. சரீர வாழ்க்கையின் ஒரு நிழலுக்காக உங்கள் இருதயத்தில் உள்ள பேராவலைம் பரிமாற்றம் செய்து, உண்மையான சரீர வாழ்க்கையைத் தவறவிட்டுவிடாதீர்கள்.

உம் மையான சபை வாழ்க்கையென்றால், அங்கு எல்லாவற்றிலும் இயேசுவுக்கே முதல் இடம் இருக்கும். அது, மக்கள் இயேசுவை இன்னும் அதிகமாக அறிவதற்கு உற்சாகப்படுத்துகிறது. மக்கள் ஒத்துப்போவதற்கு அல்லது பாசாங்குசெய்தவற்கு அல்ல, மாறாக உண்மையுள்ளவர்களாக இருப்பதற்கு, அவர்கள் தேவனால் மறுசாயலாக்கம்படுகிற பயணத்தில் அவர்களை விடுதலையாக்குகிறது. ஒருவர் இன்னொருவருடைய வாழ்க்கையில் ஈடுபாடுகொள்வது எப்படி என்று--மற்றவர்களைத் தந்திரமாகக் கையாளுவதற்கு அல்ல, மாறாக அவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய மாபெரும் வேலையை உற்சாகப்படுத்த--அது காண்பிக்கிறது.

அதைக் கண்டுபிடிப்பது ஏன் அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது? அநேக விசுவாசிகள் தங்கள் சொந்தத் தேவைகளில்தான் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துகிறார்கள். எனவே, மற்றவர்களுடன் உண்மையான ஐக்கியம் கொள்வது எப்படி என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இது ஒரு காரணமாக இருக்கக்கூடும். குறுகிய காலத்துக்குக் கொஞ்சம் நன்மையைச் செய்யக்கூடிய மலிவான மாதிரிகளில் நாம் திருப்தி அடைந்துவிடுவதும் இன்னொரு காரணமாக இருக்கக்கூடும். அப்படிச் செய்வதால், உம் மையான சரீர வாழ்க்கை வேண்டும் என்ற நம் ஆழமான ஏக்கங்களை நாம் நீக்கிவிடுகிறோம். இயேசுவை அவருடைய சபையின் தலையாக இருக்க அனுபவிப்பதின் தெள்ளத் தெளிவான மகிழ்ச்சியை ஒருவேளை நாம் இதுவரை ஒருபோதும் கற்றுக்கொண்டிருக்க மாட்டோம்.

இதை நாம் சரியாக்கவில்லையென்றால், நாம் எங்கு அல்லது எப்படி கூடி வருகிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. அது இன்னும் நம்மைத்தான் மையமாகக் கொண்டிருக்கும், அது தேவனுடைய மகிமைக்கு மிகக் குறைவாக இருக்கும். உங்கள் இருதயத்தில் முதல் இடத்தை வகிக்க இயேசுவை எப்படி அனுமதிப்பது என்று உங்களுக்குக் கற்றுத்தரவும், அந்தப் பேராவல் கொண்டுள்ள மக்களைக் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவிசெய்யவும், நீங்கள் ஏன் தேவனிடம் கேட்கக்கூடாது? அவரைப் பரவசப்படுத்தக்கூடிய இதைவிட சிறந்த ஜெபத்தை என்னால் கற்பனைசெய்து பார்க்க முடியாது. அது நிகழும்போது, அவருக்குள் இருக்கும் அந்த ஜீவனை நீங்கள் எப்படி, எங்கு வாழ முடியும் என்று அவர் காண்பிப்பார்.